உங்கள் பிள்ளையின் ஆசிரியர் எந்தளவுக்கு உயர் தகுதியைக் கொண்டிருக்கிறார் என்பதை அறிக

ஓர் ஆசிரியரைக் கண்டறி என்ற எங்கள் பொது பதிவகம் உங்களுக்குக் கீழ்க்கண்டவற்றைக் காண்பிக்கும்:

- உங்கள் பிள்ளையின் ஆசிரியர் எந்தப் பாடங்களைக் கற்றுத் தருவதற்கு தகுதி பெற்றிருக்கிறார்.
- தங்கள் பாட அறிவை விரிவுபடுத்த அல்லது தங்கள் வகுப்பறைத் திறன்களை செம்மைப்படுத்த அவர்கள் கலந்துகொண்டுள்ள கூடுதல் தகுதி (AQ) பயிற்சி வகுப்புகள்.
- உங்கள் பிள்ளையின் ஆசிரியருக்கு எப்போது சான்றளிக்கப்பட்டது.

பராமரிப்பு, மரியாதை, நம்பிக்கை மற்றும் நேர்மை

இவை ஒன்டாரியோ சான்றளிக்கப்பட்ட ஆசிரியர்களை வழிநடத்துகின்ற அறநெறித் தரங்களாகும்.

ஒரு பெற்றோராக, இது உங்களுக்கு என்ன அர்த்தத்தை வழங்குகிறது?

உங்கள் பிள்ளையின் ஆசிரியர் பொறுப்பானவர், நம்பகமானவர், மேலும் உங்கள் பிள்ளை ஒரு சிறந்த நபரின் கட்டுப்பாட்டில் இருக்கிறார் என்பதில் நீங்கள் நம்பிக்கையுடன் இருக்கலாம் என்பதே இதன் பொருள்.

கூடுதல் தகவல்களுக்கு:
ஒன்டாரியோ ஆசிரியர்கள் கல்லூரி
101 ப்ளோர் தெரு மேற்கு
டொராண்டோ ஓ.என் எம்.5எஸ் 0ஏ1

தொலைபேசி: 416.961.8800
தொலைநகல்: 416.961.8822
ஒன்டாரியோவில் கட்டணமில்லை:
1.888.534.2222
மின்னஞ்சல்: info@oct.ca
oct.ca

oct-oeeo.ca/fb
oct-oeeo.ca/pi
oct-oeeo.ca/tw
oct-oeeo.ca/yt
oct-oeeo.ca/ig
oct-oeeo.ca/li

Ontario College of Teachers | Setting the Standard for Great Teaching

Cette publication est également disponible en français sous le titre de *Les élèves de l'Ontario et nous*.

Ontario College of Teachers
Ordre des enseignantes et des enseignants de l'Ontario

ஒன்டாரியோ மாணவர்களை எவ்வாறு ஆதரிக்கிறோம்

கல்லூரி பற்றிய ஒரு கண்ணோட்டம்

நாங்கள் என்ன செய்கிறோம்

ஒன்டாரியோவில் உள்ள அனைத்து அரசு நிதியுதவி அளிக்கப்பட்ட பள்ளிகளிலும் பல தனியார் பள்ளிகளிலும் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு நாங்கள் உரிமம் வழங்கி முறைப்படுத்துகிறோம்.

நாங்கள் எதற்காக இருக்கிறோம்

நாங்கள் பொது நலனுக்குச் சேவை செய்கிறோம், பொது நலனைப் பாதுகாக்கிறோம். உங்கள் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கப் பாதுகாப்பான, தகுதிவாய்ந்த மற்றும் திறமையான ஆசிரியர்கள் மட்டுமே சான்றளிக்கப்படுவதை உறுதிசெய்கிறோம்.



நாங்கள் இதை எவ்வாறு செய்கிறோம்

நாங்கள் ஆசிரியர்களுக்கு உரிமம் அளிக்கிறோம்
ஒன்டாரியோ சான்றளிக்கப்பட்ட ஆசிரியர்கள் (OCTகள்) மட்டுமே அரசு நிதியுதவி அளிக்கப்பட்ட ஒன்டாரியோ பள்ளிகளில் கல்வி கற்பிக்க முடியும். உரிமம் பெற்ற ஆசிரியர்கள் உலகம் முழுவதிலுமிருந்து வருகிறார்கள், அவர்கள் பொறுப்பைக் கொண்டிருப்பவர்கள் மற்றும் உயர் தொழில்முறைத் தரங்களுக்கு உட்பட்டவர்கள்.

நாங்கள் ஆசிரியர்களுக்கு வழிகாட்டுதலை வழங்குகிறோம்
எங்கள் தொழில்முறை ஆலோசகர்கள் மூலம், கொடுமைப்படுத்துதல் மற்றும் மன ஆரோக்கியம் போன்ற முக்கியமான விஷயங்களில் தங்கள் மாணவர்களுக்கு எங்கள் உறுப்பினர்கள் உதவுவதற்கான ஆலோசனையை வழங்குகிறோம்.

சிறப்பான கல்வி கற்பித்தலை ஆதரிக்கிறோம்
வகுப்பறைக்கு ஆசிரியர்களைத் தயார்படுத்துவதற்கும் அவர்களுக்குத் தொடர்ந்து கல்வி வழங்குவதற்கும் நாங்கள் உதவுகிறோம். ஆசிரியர் கல்வித் திட்டங்களுக்கும் நாங்கள் ஒப்புதல் அளிக்கிறோம்.

நாங்கள் முக்கியப் பங்குதாரர்களுடன் இணைந்து செயல்படுகிறோம்
ஒழுங்குமுறைகள் மற்றும் சட்டங்களை உருவாக்குவதற்கும் மாணவர்களைச் சிறப்பாகப் பாதுகாப்பதற்கும் நாங்கள் அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுகிறோம்.

உங்கள் கவலைகளைக் கேட்டறிகிறோம்
தொழில்முறை முறைகேடு குறித்த உங்கள் கவலைகளை நாங்கள் தீவிரமாக எடுத்துக்கொண்டு, அவற்றைத் தீர்த்து வைக்கிறோம். -தொழில்முறை எதிர்பார்ப்புகளை நிறைவேற்றாதவர்கள் மீது நாங்கள் தடைகளை விதிக்கிறோம், மேலும் ஒழுக்கம் சார்ந்த முடிவுகளைப் பகிரங்கப்படுத்துகிறோம்.

பெற்றோர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கக்கூடிய வளங்கள்

1.
ஓர் ஆசிரியரைக் கண்டறியவும்:
ஒன்டாரியோ சான்றளிக்கப்பட்ட ஆசிரியர்கள் நன்கு தகுதி பெற்றவர்கள். உங்கள் பிள்ளையின் ஆசிரியருடன் உரையாடலைத் துவங்க, அவர்களின் தகுதிகளைப் பாருங்கள். (oct-oeeo.ca/findateacher)

2.
ஒரு பேச்சாளரை அழைக்கவும்:
நாங்கள் மாணவர்களை எவ்வாறு பாதுகாக்கிறோம் என்பது பற்றி உங்கள் அடுத்த பள்ளி மன்றக் கூட்டத்தில் பேசக்கூடிய நிபுணர்கள் எங்களிடம் உள்ளனர். (oct-oeeo.ca/speaker)

3.
தரநிலையில் சந்தா சேருங்கள்:
எங்கள் காலாண்டு செய்திமடல் பெற்றோர்களை மனதில் கொண்டு எழுதப்படுகிறது. எங்கள் பணி மற்றும் கல்விச் சட்டத்தில் ஏற்படும் மாற்றங்களுடன் இணைந்திருங்கள். (oct-oeeo.ca/thestandard)

4.
ஆண்டு அறிக்கை:
தொழில் எவ்வாறு முறைப்படுத்தப்படுகிறது மற்றும் ஆசிரியர் தரநிலைகள் எவ்வாறு அமைக்கப்படுகின்றன என்பதைப் பற்றி நன்கு புரிந்துகொள்ளுங்கள். (oct-oeeo.ca/annualreport)

5.
தொழில்முறை ஆலோசகர்கள்:
ஆசிரியர்கள் எல்லா நேரங்களிலும் சிறந்த தீர்மானத்தை மேற்கொள்வதை உறுதிப்படுத்திக்கொள்ள எங்கள் தொழில்முறை ஆலோசனையைச் சார்ந்துள்ளனர். (oct-oeeo.ca/professionaladvisories)

6.
பொது விளக்கக்காட்சிகள்:
எங்கள் காலாண்டு மன்றக் கூட்டங்கள் ஒன்றிலும், எங்கள் வருடாந்திரக் கூட்டத்திலும் கல்லூரி தொடர்பான தலைப்புகளில் கலந்துரையாடுங்கள். (oct-oeeo.ca/present)

7.
தொழில்முறை ரீதியாகப் பேசுதல்:
எங்கள் விருது பெற்ற வெளியீட்டில் பயனுள்ள கற்பித்தல் நடைமுறைகள் மற்றும் அக்கறையுள்ள ஆசிரியர்களின் சுயவிவரங்கள் பற்றிய கட்டுரைகள் உள்ளன. (oct-oeeo.ca/magazine)

8.
oct.ca:
எங்கள் இணையதளத்தில் கல்லூரி குறித்த செய்திகள், மின்-செய்திமடல்கள், ஆசிரியர் தேவைகள், வீடியோக்கள், ஊடக வெளியீடுகள், ஒழுக்கம் தொடர்பான முடிவுகள் மற்றும் மேலும் பலவற்றைக் கண்டறியுங்கள்.

மாணவர்களைப் பாதுகாத்தல்

நமது பிள்ளைகளின் எதிர்காலத்தை விட முக்கியமானது எதுவுமில்லை. ஒன்டாரிய மாணவர்களின் நல்வாழ்வும் பாதுகாப்பும் தான் எங்கள் முன்னுரிமை என்பதை ஒன்டாரியர்கள் உறுதியாக நம்பலாம்.

மேலும் அறிய, oct-oeeo.ca/public -ஐப் பார்வையிடுங்கள்.

ஆசிரியர் கல்வியை மேம்படுத்துதல்

அனைத்து ஒன்டாரியோ ஆசிரியர்களுக்கும் சான்றிதழ் வழங்குவதோடு, மாகாணம் முழுவதும் கல்வி கற்பிக்கும் திட்டங்களையும் கல்லூரி அங்கீகரிக்கிறது. ஒன்டாரியோவில் உள்ள அனைத்து கற்பித்தல் திட்டங்களும் நெறிமுறை மற்றும் நடைமுறை தரங்களையும் வழிகாட்டுதல்களையும் பின்பற்றுவதை நாங்கள் உறுதிசெய்கிறோம்.

தற்போதுள்ள ஆசிரியர் கல்விக்கான கூடுதல் தகுதி பயிற்சி வகுப்புகளையும் நாங்கள் மீளாய்வு செய்து அங்கீகரிக்கிறோம்.

ஒன்டாரியோ மாணவர்கள் தகுதிவாய்ந்த ஆசிரியர்களிடமிருந்து மட்டுமே சிறந்த கல்வியைப் பெறுவதை உறுதிப்படுத்த, கல்வி சார்ந்த திட்டங்களை அங்கீகரித்தல், ஆசிரியர்களுக்கு உரிமம் வழங்குதல் மற்றும் அவர்களுக்குத் தற்போதைய தொழில்முறை சார்ந்த கற்றலை வழங்குதல் ஆகியவை உதவுகின்றன.

உங்களுக்கு ஏதாவது கவலை இருந்தால்

தொழில்முறை முறைகேடு, திறமையின்மை அல்லது கல்லூரி உறுப்பினர்களின் தகுதியின்மை குறித்த உங்கள் கவலைகளைக் கல்லூரி கேட்டறியும். ஓர் ஆசிரியரைப் பற்றி உங்களுக்கு ஏதேனும் கவலை இருந்தால், நீங்கள் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

1.
முதலில் ஆசிரியருடன் பேசுவதன் மூலம் பிரச்சனையை தீர்க்க முயற்சி செய்யுங்கள், பிரச்சனையைத் தீர்க்க முடியாவிட்டால் முதல்வர் அல்லது மாவட்ட பள்ளி வாரியத்தை அணுகுங்கள்.

2.
தீர்வு கிடைக்காவிட்டால், கல்லூரியைத் தொடர்பு கொள்ளுங்கள். எங்கள் ஆன்லைன் படிவத்தை oct-oeeo.ca/submitcomplaint -இல் காணுங்கள்.

3.
அற்பமானதாகவோ அல்லது எரிச்சலூட்டுவதாகவோ கருதப்படாத புகார்கள் ஒரு குழுவால் விசாரிக்கப்பட்டு பரிசீலிக்கப்படும், மேலும் அவை ஒரு பொது விசாரணைக்குப் பரிந்துரைக்கப்பட வேண்டுமா என்பதை அக்குழு தீர்மானிக்கும்.